சிவமயம்

REGISTERED AS A NEWSPAPER IN GEYLON
P. M. G. No. H. A. 19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புக. ௫௯] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஆ மார்கழி மீ ௪ உ (1947 டிசெம்பர் 19 வெள்ளிக்கிழமை) [ இல ௭௦

## நாம் யார்?

கவிராஜ பண்டிதர், நா. கனகராஜையர், B. O. L.

நான் யார் என்ற வினா வேதம்முதலிய நூல்களிலே பலமுறை எழுந்துளது; விடையும் தக்கபடி கொடுக்கப்பட்டுள்ளது. தன்மையிடத்திலே ஒருமைக்குத்தான் உரிமையுண்டு. பன்மைக்கு நிலையில்லை. நான் என்ற உணர்ச்சி ஒருவனைப்பற்றியதேயொழியப் பலரைப் பற்றுவதில்லை என்று சிலர் கூறுவதுண்டு. உளப்பாட்டுத் தன்மைப்பன்மை என்றஒரு உருவத்தை இலக்கணம் ஏற்கின்றது. முன்னிலையோரையும் படர்க்கையோரையும் தன்மையில் இருப்பவன் தன்னோடு சேர்த்துத் தன்மையாகப் பேசும் இடமே உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாம்.

ஒரு வீட்டில் இருப்பவர் தம்மைப்பற்றி நாம் என்று கூறிக்கொளவதும் அடுத்த வீட்டாரை முன்னிலைப்படுத்தியும் வேறு வீட்டார்களைப் படர்க்கையாக்கியும் பேசுவதும் இயற்கையே. இப்படியே ஒரு ஊரார் தன்மைப்பன்மையாவதுண்டு. ஒரு நாட்டார் தன்மைப்பன்மையாவதுஉண்டு உலகமே ஒரு தன்மைப் பன்மையில் அடங்குவதுமுண்டு. இந்த உலக நிலையை நோக்க மற்ற உலகங்கள் முன்னிலையும் படர்க்கையுமாகலாம். நாம் நீர் அவர் என்று பேசும் இப்பேச்சு வெவ்வேறு வழிகளால் வருவதற்கு இடம் உண்டு. புலவர் தம்மை ஒரு கூட்டமாக்கி, மற்றவர்களை வேறுபிரித்துப் பேசலாம். நாட்டன்பர் தம்மை ஒரு இனமாக்கி அவ்வுணர்ச்சி இல்லாதவரை வேறுபிரித்துப் பேசலாம். இறைவன் அன்பர்தம்மை ஒரு இனமாக்கிப் பிறரை முன்னிலைபடர்க்கையில் நிறுத்தலாம். இப்படியே உலக வாழ்வில் உள்ள ஒவ்வொரு துறையிலும் மனிதர் இடையே தோன்றும் மன வேற்றுமைகளை இடவேற்றுமைகளால் விளக்கலாம்.

நமது நோக்கம் தெய்வத் திருவருளை நம் முன்னோர் நமக்கு உணர்த்தியவண்ணமே நமஇனத்தார் அடையவேண்டும் என்பது' ஆதலால் இங்கு நாம் யார் என்ற தலைப்பு இத்துறையில் நம்மோடு நிற்க உரிமையுள்ள இனத்தையே குறிப்பதாம். பட்டினத்தடிகள் நான்யார் என்ற வினாவை எழுப்பி ஒருபெரிய அகவல் பாடுகின்றார். உடம்பினுள் இருக்கும் எல்லாவற்றையும் அலசிப் பிழிந்து அவற்றுள் மறைந்து விளங்கும் தத்துவத்தைத் தேடுகிறார். அவரைப்போல நம்மைப்பற்றி இப்பொழுது நாமேஆராய்ந்துகொள்ளவேண்டிய நிலைமையில் இருக்கிறோம், "பழமைகளை உதறவேண்டும்; களையவேண்டும்; இடிக்கவேண்டும்; தகர்க்கவேண்டும். பழமையைப் பாழாக்கிச் செம்மைப்படுத்திய நன்னிலத்தே புதுமையைப் பயிராக்கவேண்டும்; பண்படுத்தவேண்டும்; வளர்க்கவேண்டும். அது தளிர்த்து அரும்பி மலர்ந்து காய்த்துக் கனிந்து பலன்தரும் செயலைக் கண்டு கண்டு மகிழவேண்டும்;" இம் முழக்கம் இந்நாளில் எத்துறையிலும் கேட்கின்றது. தெய்வம் கொள்கை என்பது முன்னும் முதுபொருட்கு முன்னும் முதுபொருளாயினும் பின்னும் புதுமைக்கும் பின்னுகும் பேரொளி என்பதை இம்முழக்கத்தார் அறிவதில்லை. அறிந்தாலும் வெளிப்பட உரைப்பதில்லை. ஆகவே நாம் யார் என்பதை நன்கு ஆராயவேண்டிய காலம் இதுவேயாம்.

பிற மதங்களைப் பின்பற்றுவோர் இந்நாளில் எப்படி வாழ்கின்றார் என்பதை நாம் நன்கு உணரவேண்டும். நம் முன்னோர் நமக்கென வகுத்த நெறியிலே நடத்தற்குரியவர், இந்நாளில் எங்ஙனம் செல்கின்றார் என்பதையும் நாம் உணரவேண்டும்- தாரதம்மிய உணர்ச்சியிலலாத வாழ்விலே சுவையில்லை. நம்மை நம்மோடு நாம் சார்த்தி, நோக்குவதற்கு வழியில்லை. பிறரோடு சார்த்தியே உயர்வு தாழ்வுகளை அறியவேண்டும். "தெய்வத்தைப் பற்றிய சிந்தனையும் பேச்சும் உலகத்தில் எந்நாட்டிலே எம்மொழியில் முதல்முதல் உண்டாயிற்று? இந்நாளில் தெய்வவுணர்ச்சியிலே சிறந்து விளங்கும் நாடு எது? மனித வாழ்வுக்கு இவ்வுணர்ச்சி அவசியம் வேண்டுவதுதானா? இவ்வுணர்ச்சியில்லாமனிதருக்கு உலக வாழ்வு நன்கு நிகழாதா?" இப்படி அநேகம் வினாக்கள் தோன்றலாம் விடை கூறுவதுதான் எளிதில்லை.

மனிதன் தனது பூர்வ நிலைமையாகிய விலங்குநிலைமாறி நாகரீகம்படைத்த பிறகுதானே மதத்தைப்பற்றி நினைக்கக்கூடும். நாகரிகம்முதல்முதல் உலகத்தில் எந்த நாட்டில் உண்டாயிற்று என்று உறுதிசெய்த பிறகுதானே மதவுணர்ச்சியைப் பற்றிப் பேசக்கூடும்?—நாம் நம் நாட்டிலே தான் மனித நாகரீகம் முதன்முதலாக எழுந்தது என்று உறுதியாகக்கூறுவோர். இப்படியே ஒவ்வொருவரும் தம்தம் நாட்டைப் பற்றிக் கூறிக்கொள்ளலாம். இதுபோலவே "என் மதமே உலகத்துக்கு உகந்த மதம். என்மதமே எவரும பின்பற்றத்தக்கது. என்மதமே உண்மையானமதம். இந்த வழியிலேதான் உண்மையான மோக்ஷமுண்டு" என்று ஒவ்வொரு மதத்தின் அதிகாரிகளும் கூறலாம். யார் என்ன கூறினும் ஒரு சார்பில் நில்லாமல் உண்மையை ஆராய்ந்து உணர்ந்து உலகம் உணர உணர்த்தும் பெருமக்கள் எந்த நாட்டிலும் எந்த நாளிலும் உண்டு.

இன்று உலகத்திற் பெரும் பகுதியான மக்கள்கிறிஸ்தவமதத்தைப்பின் பற்றுகின்றனர். பௌத்தமதம் அடுத்த நிலைமையில் இருக்கிறது. இஸ்லாம் மதம் மூன்றும நிலைபெறும். நமது மதம் நான்காம் நிலைமையிலிருக்கின்றது. கிறிஸ்தவர்க்கு அவரது மதத்திலே ஆழ்ந்த நம்பிக்கையுண்டு பிறரையும் அவர் தம்வழியிலே இழுத்துக்கொள்ள முயல்வதை இன்றும் பார்க்கிறோம்.

இஸ்லாமியர்க்குத்தமது கொள்கையிலே எவ்வளவு பற்று உண்டென்பதை இன்று நாம் வடநாட்டிலே கண்கூடாகப்பார்க்கிறோம், ஹிந்து என்ற பெயரால் அயலார் அறியும் நம்மதத்துக்கு நாம் பலவகைப் பெயர்கள் சூட்டிக்கொண்டாலும் பிறர்க்கு

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

### பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

## தேசீயத் தமிழர் கூட்டம்

### ஜனவரியில் நிகழுமாம்

கொழும்பில் உள்ள பிரபல தமிழரது கூட்டம் ஒன்று சென்றவாரம் கொழும்பிற் கூடியது என்று ஓர் தகவல் கிடைத்திருக்கிறது. இலங்கையிலே வகுப்பு ஒற்றுமையை நிலைநாட்டுதற்கும், ஐக்கிய இலங்கையை ஏற்படுத்தற்கும், ஓரே அரசியலை இலங்கையில் நிறுவுதற்கும் சாதகமாக, பொதுவான அபிப்பிராயத்தை உருவகப்படுத்துதற்கு 'அகில இலங்கை தேசீயத் தமிழர் மகாநாடு" என்ற ஓர் நிரந்தர ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதுபற்றி ஆலோசிப்பதற்காகவே மேற்கூட்டம் கூட்டப்பட்டதாம்.

மேற் மகாநாட்டை உருவகப்படுத்தும் ஆக்கவேலைகளைச் செய்வதற்கு திரு, எஸ். சோமசுந்தரத்தைத் தலைவராகவும்,. திருவாளர் எஸ் எஸ், குமாரசிங்கம், ஏ வி. செல்வராஜா, என்பவர்களை இணைக்காரியதரிசிகளாகவும், எஸ். சோமநாதனைத் தனாதிகாரியாகவும் கொண்ட நிருவாக சபை தெரிந்தெடுக்கப்பட்டது. 1948 ஆண்டு ஜனவரியின் கடைசிப் பகுதியில், ஓர்தமிழர் மகாநாட்டைக் கூட்டுவதென்றும் ஆலோசிக்கப்பட்டிருக்கிறது.

## இந்திய ஸ்தானிகர்

### அவர்களின் பொருட்டு ஏற்படும் செலவு

இந்தியாவின் சார்பாக அந்நிய நாடுகளில் நியமிக்கப்பட்டுள்ள ஸ்தானிகரின் மாத வேதனம்பற்றி ஸ்ரீஜாத். வி. பீ. குல்க்கர்ணி கொழும்பு "டைம்ஸ்" பத்திரிகையிற் பின்வருமாறு எழுதுகிறார்:

"ருஷியாவிலும், அமெரிக்காவிலும் இந்தியப் பிரதிநிதிகளாயுள்ளவர்களுக்குத் தனித்தனி மாதவேதனம் 3500 ரூபாவும், ஏனைய செலவுகட்கென 4500 ரூபாவுமாக, எல்லாம் 8000 ரூபா உதவப்படுகின்றது. அதுமாத்திரமல்ல, அமெரிக்காவிலுள்ள இந்திய ஸ்தானிகர் காரியாலயச் செலவின் பொருட்டு வருடந்தோறும் 1,114,000 ரூபா தேவைப்படுகிறது. ருஷியாவில் உள்ள காரியாலயத்தின் அரைவருடச்செலவு 750,500 ரூபாவாம். இந்த இருநாட்டு ஸ்தானிகர் காரியாலயச் செலவு இவ்வளவென்றால், மற்றும் நாடுகளில்உள்ள காரியாலயங்களின் செலவு எப்படியிருக்கும்!"

## இலங்கையில் தமிழர் நிலை

### நகரசபைத் தலைவரின் புத்திமதி

நல்லூர் தெற்குப் பகுதியினர் புதிதாக வாசிகசாலைக் கென்று ஓர் கட்டிடத்தைக் கட்டி அதனது திறப்பு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். சைவாசாரப்படி கிரியைகள், விசேட பூசைகள் முதலியன நடைபெற்று அவ் வாசிகசாலை மகர தோரணங்களினாலும், நிறைகுடம் குத்து விளக்குகள் முதலியவைகளினாலும் அழகுற அலங்கரிக்கப் பெற்றிருந்தது.

யாழ்ப்பாண நகரசபைத் தலைவர் திரு. கதிரவேலு பொன்னம்பலம் அவர்கள் அவ் வாசிகசாலைக் கூழவினரால் வாசிகசாலையைத் திறந்து வைக்கும்படி வேண்டிக் கொள்ளவே அவர் திறந்து வைத்தார்.

அப்பால் திரு. பொன்னம்பலம் அவர்கள் பேசியவற்றின் சாரம் பின்வருமாறு:

"இம்மாதிரியான வாசிகசாலைகள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும உண்டாவதை யிட்டு மிகவும் சந்தோஷ மடைகின்றேன். ஆனால், இவைகளின் பெறுபேற்றைக் கவனிக்கும்போது மிகவும் துக்கப்படவேண்டியிருக்கின்றது. கடந்த இருபது முப்பது வருட காலங்களின முன் கல்வி பயின்றயுவர்கள் நேர்மை, வீரம், தியாகம்முதலிய அருங்குணங்கள் வாய்க்கப்பெற்றுப் பல்வேறு விஷயங்களில் முன்னணியில் நிற்கின்றனர். இக்கால வாலிபர்களோ படிப்பின் பெறுபேறாகச் சகல குணங்களிலும் பிறபோக் கடைகின்றனர். இதனையிட்டு மனம் வருந்தவேண்டியிருக்கின்றது. அத்துடன் படித்த வாலிபர் சுயநலத்தால் உந்தப்பட்டு அதன் காரணமாக மனச் சாட்சிக்கு விரோதமாக நடக்கின்றதுடன் பொறாமை, லஞ்சம் முதலிய கொடிய பழக்க வழக்கங்களைக் கையாளுகின்றனர், ஆகையினால் இம் மாதிரியான வாசிகசாலைகளினாலும், கல்விச்சாலைகளினாலும் என்ன பிரயோசனம் உண்டாகின்றது? இவைகளைச் சொன்னதன் நியாயம் யாதெனில் இவ் வாசிகசாலையினர் அம்

தொடர்ச்சி 6 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஷு
மார்கழி ௪௨ வெள்ளிக்கிழமை

## கல்வி மந்திரியின் கருத்து

"தாம் தாம் வைத்து நடத்தும் பள்ளிக்கூடங்களின் கல்வி விருத்தி காலகதியிற் குன்றிவிடுமோ என்று இவ் விலங்கையிலே வித்தியா தாபனங்களை நிர்வகித்து நடாத்தும் ஒவ்வொரு சமயவாதிகளுஞ் சந்தேகத்தோடும் அச்சத்தோடுங் காணப்படுகின்றனர்" என்று புதிய கல்வி மந்திரியாகிய திரு. நுகவெல அவர்கள், சென்றவாரம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிப் பரிசளிப்புச் சபையில் தலைமை வகித்தபோது பேசிய பேச்சிற் சொல்லியுள்ளார்" அப்படியான சந்தேகமும், அச்சமும் இந்நாட்டின்கண்ணே வித்தியாசாலைகளை வைத்து நடாத்தும் பல்வேறு சமயவாதிகளின் உள்ளத்திற் பிறந்திருக்கின்றனவென்பதை ஒருவாறு யூகித்தே கல்விப்பகுதி மந்திரி இவ்வாறு கூறினரென்பது புலப்படுகின்றது. அப்படியான சந்தேகமும் அச்சமும் இவ்விலங்கையிலுள்ள சைவர் பௌத்தர் கிறீஸ்துவர் இஸ்லாமியரென்னும் நான்கு பகுப்பினராகிய சமயவாதிகளிடத் திருக்கின்றன என்பது நிசமெனினும், அவர்களிடத்தெழுந்த சந்தேகமும் அச்சமும் சிறிது சிறிது பேதத்தோடு கூடியனவெனலாம்.

சைவர்களும பௌத்தர்களும் கொண்ட சந்தேகத்திற்கும் அச்சந்தேகத்திற்குக் காரணம் தங்கள் மார்க்கத்துப் பிள்ளைகளைக் கிறீஸ்தவர்கள் தம் மார்க்கத்திற்கு இழுத்து விடுவரென்பதாம்; கிறீஸ்தவர்களாயுள்ளார் கொண்ட சந்தேகம் அச்சமென்னுமிவைக்குக் காரணம், சைவ பௌத்தப் பிள்ளைகளைக் கிறீஸ்தவர்களாகிய தாங்கள் தங்கள் மதத்திற்கு முன்போல் இனியும் இழுக்க முடியுமோ என்பதாம். இந்த விஷயத்தில், இஸ்லாமியர் அதிக சந்தேகப்பட வேண்டியதுமில்லை; அச்சமடைய வேண்டியதுமில்லையெனலாம்; ஏனென்றால் அவர்கள் மார்க்க வைராக்கியம் பூண்டவர்கள், மேலும் இஸ்லாமியர் விஷயத்திற் கல்விவிருத்தி இக்காலத்தில் விசேஷமாக ஆரம்பித்திருக்கிறது; பெண்கள் கல்வியை விருத்தி செய்ய வேண்டுமென்னும் முயற்சிகளுஞ் செயல்களும் இலங்கையிலுள்ள இஸ்லாமியரிடத்து இப்பொழுது அதிகமாகக் காணப்படுகின்றன; சமயம் மாற்ற முயற்சிசெய்து வரும் சமயவாதிகளைத் தங்கள் சமயத்தளவில் நின்றுவிட வேண்டுமென்றும், மற்றைச் சமயப் பிள்ளைகளைத் தம் சமயத்திற்கு இழுத்தல் அடாத செயலென்றும் வித்தியா பகுதியார் தெருட்டுதல் வேண்டும்; சமய ஒற்றுமையோடு வித்தியாசாலையதிபர்களாக வுள்ளார் தத்தம் வித்தியா தாபனங்களைக் கொண்டு நடாத்துவரேல் எவ்வகையான சந்தேகமும் அச்சமும் உண்டாதற்கு ஏதுவில்லையாம்.

இவை இங்ஙனமாக, இலங்கையிலே சமயவாதிகள் தாபித்து நடத்தும் கல்வித் தாபனங்கள், அரசினர் நிர்வகித்து நடத்தும் கல்வித் தாபனங்களென இருபிரிவின வுள்ளன; இப்போது கல்வி கற்கும் சிறுவர் சிறுமியர்களின் தொகை 930,359 எனவும், இவர்களுட் சமயவாதிகள் நடாத்துங் கலாசாலைகளிற் கல்வி கற்கும் பிள்ளைகளின் தொகை 480,553 எனவும், அரசினர் பாடசாலைகளிற் கல்விபயிலுவோர் தொகை 45 ,505 எனவும் மேற்படி கல்வி மந்திரியாரே எடுத்துக் காட்டியுள்ளார். சமயவாதிகள் நடத்தும் வித்தியாசாலைகளில் அவ்வச் சமயத்திற்குரிய நூல்களும் ஒருவாறு பயிற்றப்படுகின்றன வெனலாம்; இல்லையேற் பயிற்றப்படுமெனக் காத்திருந்தது வீணுகலாம். அரசினர் வித்தியாசாலைகளில் அந்த அந்தச் சமயத்திற்குரிய நூல்களை அவ்வப் பிள்ளைகட்கும் பயிற்றப்படல் வேண்டுமென்ற நியதி யிருப்பினும், பெரும்பாலும் அங்ஙனம் பயிற்றப்படுகிறதோ என்பதுதான் ஆசங்கைக் கிடமாம்; அரசினர் வித்தியாசாலை யாசிரியர்களாக எச்சமயத்தவரும் தலைமை வகிக்கலாகும்; உதாரணமாக, நூற்றுக்குத் தொண்ணூற் றைந்து விகிதம் பௌத்த பிள்ளைகள் கல்வி பயிலும் ஒரு வித்தியாசாலையிலே தலைமை யாசிரியரும் பௌத்த சமயத்தவரா யிருந்தால், சமயக்கல்வி அவ் வித்தியாசாலையிற் கிரமமாக நடைபெறுமெனலாம். அங்ஙனமாக அவ் வித்தியாசாலைத் தலைமையாசிரியர் மாற்றப்பட, அவருக்குப் பிரதியாய் ஒரு கிறீஸ்தவ ஆசிரியர் தலைமை வகிப்பாராயின் அக் கலாசாலையிற் பயிலும் பிள்ளைகளின் பௌத்த சமயக் கல்வி பங்கப்பட நேருமெனலாம்; இப்படியான மாறுதல் காரணமாகச் சமயக் கல்விப் பங்கம் நேருதலை இந்த யாழ்ப்பாண நாட்டில் இடையிடையே காணலாம்; இப்படிச் சமயபாடப் பங்கமும் பிணக்கும் வாராமற் பாதுகாத்துக் கொள்ளுதல் வித்தியா மந்திரிமேற் பொறுத்துள்ள பெருங்கடனும்.

இனி, அரசினர் வித்தியாசாலைகளிற் கல்விபயிற்றும் ஆசிரியர்களாயுள்ளார்க்கு வேதன முதலிய விஷயங்களில் விசேஷ சகாயங்கள் செய்யப்படுகின்றனவென்றும், அரசினருதவி பெறும் வித்தியாசாலை யாசிரியர்கள் விஷயங்களில் அங்ஙனஞ் செய்யப்படுவதில்லையென்றும் கல்வி விஷயத்தில் ஈடுபட்டுழைப்போர் வித்தியா மந்திரியைக் குறைகூறுகின்றனர்; இருபகுதி உபாத்தியாயர்களும் ஒரே வகையான கடமையையே செய்வதால் அவர்களுக் கிடையே வேதனத்தில் பாராட்டி வேதன மளித்தல் முறையல்லவென்றுதான் நினைக்கக் கிடக்கின்றது; இக்குறையையும் புதிய கல்விமந்திரி ஒழித்துவிட முயற்சி செய்வாராக.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—43)

### "திலகவதியார் வாழ்க்கை"

"அண்ணா, நான் உங்களை எதுங் கேட்டால் எனக்காகச் செய்வீர்கள் தானே" என்று இனிவுடா வினவுதலும், "தங்காய், உமக்காக எதனையுஞ் செய்யச் சித்தமாயிருக்கிறேன்; நான் இந்த உலகத்தில் வாழ்வதும் என் தாயாருக்கும் உமக்குமாகத்தான் என்று கண்டுகொள்ளும்" என அன்புடன் பகர்ந்தான் தமயன்; "அப்படியானால் நான் ஒன்று கேட்சலாமோ, அண்ணா" எனலும் "நூறு முறையுங் கேட்கலாய்; நீரல்லாமல் வேறுயார், தங்கைச்சி, என்னைக் கேட்பது" என்று மகிழ்ச்சியுடன் சொன்னான் தமயன். "அண்ணா ஒரு முறை கேட்டாலே செய்கிர்களே, அப்படியிருக்க நான் உங்களை நூறு முறை கேட்கவேண்டிய தில்லையே" என்று புன்னகையரும்பச் சொன்னாள் சிவபாக்கியம்; "நான் குறித்துச் சொன்னது அப்படியல்ல, தங்கைச்சி, ஒன்றல்ல நூறு கருமத்தைச் செய்யும்படி நீர் கேட்டாலும் நான் தயங்காமற் செய்வேன் என்பதையிட்டே சொன்னேன்" என்று சொன்னான் சிவகுருநாதன்; "அண்ணா, உங்களையும் தனபாக்கியத்தையும் தம்பதிகளாகப் பார்க்க ஆசைப்படுகிறேன்" என்று கனிவுகூரச் சொன்னாள் தங்கை; கேட்ட தமயன் திகைத்தான்; உடனே அவன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு 'தங்கைச்சி, அப்படி நடக்குங்காலத்தில் நீர்தானே நின்று எல்லாக் கருமங்களையும் நடத்தி வைப்பிர்; நீர்தானே தம்பதிகளை மகிழ்ச்சியோடு பார்ப்பீர்" என்று இதமாகச் சொன்னான் தமயன்; "அந்தக் காட்சி எப்பொழுதண்ணா எனக்குக் கிடைக்கும்" என்று தங்கை கவலையுடன் கேட்க, "நடக்கும்போதுதான் கிடைக்குமம்மா. நாம் நினைத்தபடியெல்லாம் நடக்குமா? அந்த ஆண்டவன் நினைத்தல்வேண்டும்; அல்லாமலும், என்னருமைச் சகோதரமே, நீர் இப்படிக் கன்னிகையாக விருக்க, நான் கல்யாணஞ் செய்வேனென்று நீர் எப்படிக் காத்திருக்கலாந் தங்காய்? உம்முடைய கருமம் என்றைக்கு நிறைவேறுமோ அன்றைக்கே என்கருமமும் நிறைவேறுதற்கு ஒப்பாகும்" என்றான் மூத்தோன்; 'அண்ணா, என் உள்ளக் கிடக்கை உங்களுக்குத் தெரியுந்தானே" என்றாள் இளையாள் "தெரிந்தபடியாற்றான் இப்படிச் சொல்கிறேன், என் அருமைத் தங்காய்' என்றான் தமயன், 'உங்கள் கருமம் நிறைவேறினால் என கருமம் நிறைவேறியதையொப்பச் சந்தோஷப்படுவேன் அண்ணா, என்னுள்ளத்தில் நான் வரித்துள்ளவர் இன்னமுங் கிட்டவில்லை; கிட்டியபின் தாயார் சொற்படியும் உங்கள் சொற்படியும் நடந்து கொள்வேன்; தனபாக்கியத்தை நீங்கள் பெண்ணுகக் கொள்ளவேண்டுமென்பது எல்லார்க்கும் சம்மதம், நீங்களும் அதற்கு மாறல்ல; ஆனதால் அண்ணா, தடைசொல்லாமல் இப்பொழுதே என்னையும் தாயாரையும் தங்கை பாக்கிய லட்சுமியையும் மற்றையோரையும் மகிழச் செய்யுங்கள்; என் விஷயத்தில் "கிட்டாதாயின் வெட்டெனமற" என்றபடி ஒருவர்க்கு வாழ்க்கைப்படவேண்டுமென்பதை அறவே மறந்து, தெய்வத்தைச் சிந்தித்து வழிபட்டுக்கொண்டு மனஆறுதலோடு வாழ்வேன்; பத்தியுடன் இறைவனைப் பணிவார்க்கு இடைஞ்சலில்லை அண்ணா, அல்லாமலும், அண்ணா சொல்லுகிறேனென்று குறை யெண்ணுதீர்கள், தமக்கென வரித்த கணவன் கிட்டாதுபோக, உத்தமியாராகிய திலகவதியார் வாழ்ந்த தூய சைவவாழ்க்கையையும் செய்த சிவத்தொண்டையும் பெற்ற பேற்றையும் நாங்களெல்லோமும் பெரியபுராணத்திற் படித்தோமல்லவா? அப்படியான வாழ்க்கையை வாழவேண்டுமென நான் ஆசைப்படுகிறேன்: அண்ணா நீங்கள் கவலைப்படாதீர்கள்; எங்கள் தாயார் கவலைப்பட்டால் நீங்களே தாயாருக்கு ஆறுதல் சொல்லித் தேற்றுங்கள்" என்று கண்களில் நீர் துளிப்பச் சொன்னாள் சிவபாக்கியம். தன் அருமைத் தங்கை இப்படியெல்லாம் ஞாயஞ் சொல்லக் கேட்டுக்கொண்டிருந்தவனாகிய சிவகுருநாதன், சற்றுநேரம் யோசித்துவிட்டு, "தங்காய, திலகவதியாரைப் போல் வாழவேண்டுமென்று நீர் விரும்பினால், அவருடைய சகோதரராகிய திருநாவுக்கரசரைப் போல வாழவேண்டுமென்று நானும் விரும்பலாந்தானே, அம்மா" என்று சிந்தனையோடு சொன்னான் சிவகுருநாதன்: கேட்ட தங்கை பதில் சொல்வதற்கு வகையறியாளாய்ச் சும்மாவிருந்தாள்; இங்ஙனமாக, கண்ணகியம்மை தம் மக்களிருந்த தலைவாசற் பக்கம் வந்தாள்.

### "நெஞ்சங் கடுத்தது காட்டும்முகம்"

தன்னுடைய அருமையான மக்களிருவரும் முகவாட்டத்தோடு கூடியவர்களாகப் பேசக்கண்ட தாயானவள் "என் மக்காள், நீங்கள் இங்கேயா நிற்கிறீர்கள்" என்று கேட்பதற்கிடையில், தன் பிள்ளைகளிருவருங் கவலையோடு நிற்பதை அவதானித்தாள். மக்களும் தாங்கள் கொண்ட கவலையை மறைத்துத் தத்தம் முகத்தில் மகிழ்ச்சி காட்ட முயன்றனரேனும், "நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்" என்றபடி, அகத்திலேயுள்ள கவலை பெற்றவளைக் கண்ட மாத்திரத்தே அதிகப்பட இருவரும் சற்றுநேரம் தாயாருக்கு என்னபதில் சொல்வதென்றறியாதவராய்ச் சும்மா நின்றனர். பின்னர்ச் சிவகுருநாதன் ஒருவாறு தன் கவலையை அகற்றிவிட்டுச் சந்தோஷத்தோடு கூடிய முகத்தினனாய் "அம்மா, எங்கள் தங்கைச்சி சொல்வதைக் கேளுங்கள்" எனலும், தாய் மகளுடைய முகத்தைப் பார்க்க, மகளும் முகமலர்ச்சி காட்டி, "அம்மா, நீங்கள் அண்ணாவுக்காகவுஞ் சொல்லக்கூடாது, எனக்காகவுஞ் சொல்லக்கூடாது, நடுவு நிலைமையோடு ஆர் சரியென்பதைச் சொல்லிவிடுங்கள், நான் உள்ளதைச் சொல்லுகிறேன்" என்று தனக்குந் தன் தமயனுக்குமிடையே நடந்த சம்பாஷணையை ஒன்றுமொழியாமற் சொன்னாள்; "மகனே, உன்னுடையமுறைப்பாட்டைச் சொல்லு" என்று தாய் கவலைகூர்ந்தவளாய் வினவ, "அம்மா, எனக்கு வேறாக முறைப்பாடில்லை; தங்கைச்சி சொன்னவை முழுவதும் நிசம்; ஆனால் ஒரு விஷயம் மாத்திரம் உங்களைக் கேட்கிறேன், அம்மா, என் அருமைத் தங்கைச்சி நித்திய கன்னிகையாக விருக்க, நான் இல்வாழ்க்கையுட் புக, என்மனஞ் சம்மதப்படுமா? தெய்வத்திற்குச் சம்மதமாகுமா? உலகம ஒத்துக்கொள்ளுமா? தங்கைச்சி இப்படி என்னைக் கேட்கலாகுமா? நான் வேறொன்றுஞ் சொல்லவில்லை, தங்கைச்சி விவாகஞ் செய்தவுடன், தங்கைச்சி சொல்லுகிற பெண்ணை நான் கல்யா

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. தே. க. — தமிழ்க் காங்கிரஸ் ஒற்றுமை

## அதனை ஏற்படுத்தும் மார்க்கம்

### முதலில் தமிழ்மக்கள் ஒன்றுபடவேண்டும்

[ நமது அரசியல் நிருபர் எழுதுகிறர் ]

இன்று தமிழ் மக்கள் அடைந்துள்ள நிலைமை மிகவும் கேவலமானது; இதனை எல்லாரும் ஒத்துக்கொள்ளுகிறர்கள். இன்றைய அரசியல் வாழ்க்கையில், தமிழர் அநாதர்களாகவிட்டனர். இதற்குக் காரணர்யார்? என்னும் கேள்விக்கு இன்று பலவிதமான விடைகள் வெளிவரும். ஆனல் அதனைப்பற்றி ஆராய்வதிற் பலன் இல்லை. கறந்த பால் முலைக்சேறப்போவதில்லை நடந்துமுடிந்த காரியத்தைப்பற்றி கவலைப்பட்டுஆவதொன்றுமில்லை இனிநடக்கவேண்டியதை ஆராய்ந்துஓர்முடிவுக்கு வருவதே அறிஞர்கடமை- அக்கடமையை ஆற்றவேண்டியது தமிழ்க்காங்கிர .தமிழ் மக்களின் உண்மைப் பிரதிநிதித்துவஸ்தாபனமாக இன்று இலங்கையில் விளங்குவது அது ஒன்றுதான். இந்த விஷயத்தில் திரு ஜீ ஜீ பொன்னம்பலத்தின் நிலைமை —மனப்பான்மை, எமக்குதவிசெய்வதாக இல்லை என்பதை வெளிதிறந்து கூறவேண்டியிருக்கிறது, திரு. ஜீ. ஜீ. சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்புத தமிழர் அளித்த வரவேற்புபசாரத்தில் கூறியன, இப்போதைய நெருக்கடியைத் தமிழ்மக்களுக்குச் சாதகமாகத் தீர்க்கக் கூடியதாக இல்லை "நாம் மற்றும் சமூகத்தாருடன் ஒத்துழைப்போம்; ஒத்துழைக்கத்தான் போகிறேம்" என்று சும்மா கூறுவதினல் பலன் கிடைக்கமாட்டாது; அப்படியான ஒத்துழைப்பை எப்படிப்பெறலாம்: அதற்கான மார்க்கங்கள் யாவை என்பவற்றை ஆராய்ந்து தமிழ்மக்களைவழிகாட்டவேண்டியது ஜீ ஜீ. யின் கடமை. பழையசுலோகங்களைக் கிளிப்பிள்ளைபோலத் திருப்பித் திருப்பிக் கூறுவதாற் பயன் இல்லை.

O

**ஓர் மகாநாடு கூட்டுக**

முதலில் தமிழ்மக்களிடையே பூரணமான ஒற்றுமை ஏற்படவேண்டும். அதற்கு இடைஞ்சலாக இன்று இருப்பவர்கள்யார்? இருக்கும் காரணங்கள் யாவை? தமிழ்க் காங்கிரஸ பெரும்பான்மையினரான தமிழ் மக்களுக்குப் பிரதிநிதித்துவ ஸ்தாபனம் என்பது உண்மை. ஆனல் அதன்பொருட்டு அதற்கு வெளியேயுள்ள தமிழ் மக்களைத் தேசத்துரோகிகளென்றும், பதவிவேட்டுவரென்றும், பச்சோந்திகள் என்றும திட்டுவதுமுறையாகாது. தமிழ்க்காங்கிரஸ் வாதிகளிடையே எந்தத் தமிழ் இரத்தம் செறிந்து ஓடுகிறதோ, அதே வீரத் தமிழ் இரத்தம், புனிதத் தமிழ் இரத்தம் தமிழ்க் காங்கிரஸிற்கு வெளியேயுள்ள தமிழ் மக்களிடையேயும் செறிந்து பாய்கிறது என்பதனை முதலில்உணருதல்வேண்டும். அபிப்பிராயபேதத்தைக்காரணமாகக் கொண்டு, அவர்களை வைதலும், குறை சொல்லுதலும் நீதியல்ல அவர்களைத் தம் பக்கலுக்கு இழுக்கவேண்டும். இதுதான் தமிழ்க் காங்கிரஸ் வாதிகளின் முதற் கடமை. அன்பை, சமரச மனப்பான்மையை சாத்வீகத்தைத் தமிழ்க் காங்கிரஸ தலைவர்களும், அவர்களைப் பின்பற்றுவோரும் உண்மையிற் கைக்கொள்ளுவரேயானல், இந்தவேலை அவ்வளவு கஷ்டமாகவிராது இன்று ஸ்ரீமான்கள் சுந்தரலிங்கம், சிற்றம்பலம், நல்லையா, எதிர்மனசிங்கம் முதலாம் பாராளுமன்றத் தங்கத்தவர்கள் தமிழ்க் காங்கிரசுக்கப்பால் நிற்கின்றனர். இவர்களையும், இவர்கள் கொள்கையை ஆதரிக்கும் காங்கிரசைச் சேராத மற்றும் பலரையும், தமிழ்க் காங்கிரஸ்காரர் வெறுத்தொதுக்கவொண்ணுது அவர்களையும் சேர்த்து ஓர் மகாநாடு கூட்டவேண்டும்.

O

**மீண்டும் மீண்டும் பிளவு வேண்டாம்**

தமிழ்க் காங்கிரஸ் என்றல் ஜீ. ஜீ: ஜீ. ஜீ தான் தமிழ்க் காங்கிரஸ் என்ற பேய்த்தனமான ஓர் எண்ணம் ஓர் சிலர்க்கிடையே பரவியிருக்கிறது. தமிழ்க்காங்கிரஸ் ஓர் பொது ஸ்தாபனம்: அது ஜீ. ஜீ.க்கு எழுதப்பட்டதல்ல அதன் தலைவராயிருக்க ஜீ ஜீ. க்கு எவ்வளவு லாயக்குண்டோ, அவ்வளவு லாயக்கும் உரிமையும் ஸ்ரீமான் சுந்தரலிங்கத்துக்கும் உண்டு. தமிழ்க் காங்கிரஸ் ஓர் தனிப்பட்ட மனிதரின் ஸ்தாபனம் என்றும், அதில் ஜீ ஜீ. சர்வாதிகாரம் செலுத்துகிறர் என்றும், சொல்லப்படுகிறது. அது உண்மையானல் அதற்கு முதற் பொறுப்பாளிகள் ஸ்ரீ சுந்தரலிங்கம் திரு. சிற்றம்பலம், திரு. எஸ். ஆர். கனகநாயகம், திரு. எம். ஆர். காராளசிங்கம் போன்றவர்கள்தான் என்பதனைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. இவர்கள் தமிழ்க் காங்கிரசிற் சேர்ந்து, தங்கள் கொள்கையின் திறமையை விளக்கிப் பொதுஜனங்களின் ஆதரவைச் சம்பாதித்து அதன்மூலமாகக் காங்கிரசின் அதிகாரபீடத்தைக் கைப்பற்றியிருக்க வேண்டும். அதனைவிடுத்து வெளியே நின்று குறை சொல்வதால் ஆம்பயன் இல்லை. நேர்மாறாக தமிழ்மக்களுக்கிடையே மீண்டும் மீண்டும் பிளவைக் கொண்டுவருவதுதான கண்ட பயன் போனதுபோகட்டும்: இனியாவது தமிழ்மக்கள் பந்துக்கட்டாக ஒன்றுசேரப்போகின்றனரா? அல்லது இனியும் நெல்லிக்காய்மூடைபோலத்தான் இருக்கப்போகின்றனரா? என்பதுதான் இப்போதைய கேள்வி.

O

**ஐக்கிய முன்னணி ஏற்படுத்துக**

தமிழ்க் காங்கிரஸ் தனது காரிய நிருவாகசபையைக் கூடிய சீக்கிரம் கூட்டி, இப்போதுள்ள அரசியல்நிலைமையைநன்கு ஆராயவேண்டும். நிலைமை இப்படியேஇனியும் இருக்குமானல் தமிழ் மக்களின் கதி என்ன என்பதை ஒவ்வொரு அங்கத்தவரும் நன்கு சிந்தித்து ஓர் முடிவு காணுதல்வேண்டும். அதன்பின், காங்கிரஸ் அதிகாரபீடம் இப்போது காங்கிரசுக்குவெளியேயுள்ள தமிழ்மக்களையும் சேர்த்து ஓர் மகாநாடு கூட்டி, அவர்களின் கொள்கையை அறியவேண்டும். ஸ்ரீமான்கள்: சுந்தரலிங்கம், சிற்றம்பலம், நல்லையா, எதிர்மனசிங்கம், சுல்பிரட் தம்பிஐயா முதலாம் பாராளுமன்றத்தவரும், ஸ்ரீமான்கள் நடேசன், ஆர். ஆர. நல்லையா, எஸ் ஆர். கனகநாயகம், எம். ஆர், காராளசிங்கம் பீ, வி. ராஜரத்தினம், சு. இராஜரத்தினம், வீ. வீரசிங்கம், ஹன்டி பேரின்பநாயகம். வி. தர்மகுலசிங்கம், மு. பாலசுந்தரம், க பொன்னம்பலம் முதலாம் பிரமுகர்களை இம் மகாநாட்டிற் கழைத்து ஓர் சமரச வழிகண்டு அவர்களையும் தமிழ்க் காங்கிரசிற் சேர்த்து ஓர் ஐக்கிய முன்னணி ஏற்படுத்தல்வேண்டும். இன்று பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் இம்மகாநாட்டிற் பங்குபற்ற இணங்காவிட்டால், எம் நியாயமான கோரிக்கைக்கு இணங்காவிட்டால் அவர்களுடைய தொகுதிகளிலே சென்று நாம் எம் நிலைமையைப் பொதுஜனங்களுக்கு விளக்கி, பொதுஜன அபிப்பிராயத்தை உருவகப்படுத்தல்வேண்டும். எங்கள் கோரிக்கையும் கொள்கையும்நீதியானவையே என்று அவ்வத்தொகுதியி லுள்ளவர் உணர்ந்து, எம் கேள்விக்கு இணங்கும்படி தம் பிரதிநிதிகளை அவர்கள் தூண்ட மார்க்கம் தேடவேண்டும். பொதுஜன அபிப்பிராயத்துக்கு விரோதமாக அவர்கள் நிற்கமுடியாது. இந்த முயற்சிகள்யாவும் அன்பை அகிம்சையை, சத்தியத்தை ஆதாரமாகக் கொள்ளவேண்டும் என்பதை நாம் கணப்பொழுதாயினும் மறக்கக் கூடாது.

O

**ஒற்றுமையேற்படுத்த வல்லவர் இல்லையா?**

இப்படியான ஓர் மகாநாட்டைக் கூட்டி, அதன் பயனுக எம்மை முதலிற் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படிப் பலமாவதற்கு—அப்படியான ஒற்றுமை ஏற்படுவதற்குத் தடையாக இருப்பது, கேவலமான தப்பபிப்பிராயங்களும், பரஸ்பரம் தூற்றித் திரியும் வசையுமே என்க. இவை யெல்லாம் நிறுத்தப்படல் வேண்டும். தமிழ் மக்களுக்கிடையே இவ்வாறு பூரணஒற்றுமை ஏற்பட்டுவிட்டால், எமது [illegible] இன்னும் சிறப்பாக இருக்கும். [illegible] ஐக்கிய தேசியக்கட்சியின் ஓர் அங்கமாகத் தமிழ்க் காங்கிரசைச் சேர்க்க வேண்டும். இப்போது எமக்கிடையேயுள்ள ஒற்றுமையின்மை காரணமாகவே, தமிழ்க் காங்கிரஸ், இக்கட்சியிற் சேர முடியவில்லை. தமிழ் மக்களது எதிர்காலம் சுபீட்சமாக இருக்க வேண்டுமானல், தமிழ்க்காங்கிரஸ் இனியும் தனிக்காட்டுத் தர்பார் நடாத்த முடியாது. வேறும் கட்சிகளுடன் சேர வேண்டும். சமதர்மிகள் சமசமாஜிகள் உறவு தமிழராகிய எமக்கு வேண்டவே வேண்டாம் தம்சொந்த வீட்டில், தோட்டத்தில், வியாபார விஷயங்களில் முதலாளித்துவமும், பகிரங்கத்தில் சமதர்மமும் பேசும், சமசமாஜிகள் பலரை நான் அறிவேன். யானை இறவுக்கு இப்பால் தேசியமும், யானைஇறவுக் கப்பால் தடித்த வகுப்புவாதமும் கக்கும், சமதர்மிகளையும் அறிவேன். உள்ளொன்று வைத்துப் புறம்பொன்றுபேசும் அரசியற்பச்சோந்திகளின் உறவுநமக்கு வேண்டியதே இல்லை. எம் கலையை, ஆசாராநுட்டானங்களை, நாகரிகத்தை பங்கப்படுத்தி ரூஷியாவுக்கு அடிமையாக்க நினைக்கும் சமதர்மிகள்—சமசமாஜிகள் கொண்டாட்டம் எமக்கு வேண்டாம். தமிழ் மக்களாகிய நாம் எம் பிற்கால நிலைமையை ஸ்திரப்படுத்துதற்கும் மிதவாதக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும், ரூஷிய சமதர்மமும் வேண்டாம்; அமெரிக்க முதலாளித்துவமும் வேண்டாம். எங்கள் புராதன பௌத்த—ஹிந்து மார்க்கங்களுக் குரிய "சோஷலிஸ்ட்" சமத்துவக் கொள்கையைக் கடைப்பிடிப்போம். அந்தக் கொள்கையையே, ஐக்கியதேசியக்கட்சி கொண்டுள்ளது. அதுவே, இன்னும் அரசியல் அதிகாரத்தில் இருக்கப்போகிறது. அதனுடன் தமிழ்க் காங்கிரஸ சேரவேண்டும். அப்படி அதனுடன் சேர ஆலோசிக்குமுன், தமிழ் மக்களுக்கிடையே பூரண ஒற்றுமை நிலவ வேண்டும். அந்த ஒற்றுமையை ஏற்படுத்தக் கூடியவோர் தேசாபிமானி, தமிழ் மக்களிடையே இல்லையா?

---

## இலங்கைச் சுதந்திர விழா

### குளோஸ்டர் கோமகன் பங்கு பற்றுவர்

இலங்கைக்குச் சுயராச்சிய அந்தஸ்து வருகிற பிப்ரவரியிற் கிடைக்கும்போது அதனை விமரிசையாகக் கொண்டாடுதற்கு ஏற்பாடுகள் நடக்கின்றன.

பிரிட்டிஷ் மன்னர்பிரானுடைய சகோதரரான குளோஸ்டர் கோமகனும் இச்சுதந்திர விழாவிற் பங்குபற்றுவதற்காக இலங்கைக்கு விஜயஞ்செய்வார் என்று மிஸ்டர் சேனநாயக்கா சென்ற புதன்கிழமை பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இவ்விழாவிற்சமுகமளிக்கும்படி 10000 பேருக்கு அழைப்புப் பத்திரங்கள் விடுக்கப்பட்டிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்,

---

## கோவில்களிற் பலியிடுதல்

கோவில்களிற் பலியிடுதலாகிய கெட்ட வழக்கத்தைச் சட்டபூர்வமாகத் தடுக்க வேண்டுமென்று சென்னை மேற்சபைப் பிரதிநிதிகளில் ஒருவராய ஸ்ரீஜுத் எஸ். பீ. ஆதித்தன் ஓர் அறிவித்தல் கொடுத்திருக்கிறர்.

---

ஸ்ரீமுனிஸ்பரன்துணை

யாழ்ப்பாணம்
கோட்டை ஸ்ரீ முனீஸ்வரப்பெருமான்
திருவெம்பாவைத்
திருவுலா

## விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

நிகழும் சர்வசித்துஷு வருஷம் மார்கழி மீ ௪ உ (19-12-47) வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீமுனீஸ்வரன் கோவில் திருவெம்பாவைப் பூஜை ஆரம்பமாகும். அன்று முதல் 10 நாட்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனையும், நாதஸ்வர மேளக் கச்சேரிகளும், சங்கீதக் கச்சேரிகளும் நடைபெறும்

அத்தருணம் அன்பர்கள் யாவரும் வந்து ஸ்ரீமுனீஸ்வரப் பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
ஷை கோவில் சொந்தக்காரர்.

Mis 107 20—26 12.47.

---

## புளியமர விற்பனவு

வண்ணார்பண்ணை கிழக்கு நாவலர் வீதியடித் கல்லூரி வீதியில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்குரிய ஆச்சிரமக் காணியில் நிற்கும் இரண்டு முதிய புளிய மரங்கள் நிகழும் சர்வசித்து வருடம் மார்கழி மாதம் ௫ உ (20-12-47) சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மேற்படி சபை அங்கத்தவருள் ஒருவராகிய திரு. சி. ஐயம்பிள்ளை உடையார் அவர்களால் குறித்த காணியில் ஏலத்தில் விற்கப்படும். விரும்புவோர் குறித்த நேரத்திற்குறித்தஇடத்திற் சமுகமளித்து அவற்றை விலைக்குப் பெறலாம்.

மு. மயில்வாகனம்
காரியதரிசி
யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை

15—12—47.

M 203 16, 19

---

## தந்தரோக சஞ்சீவி
### கந்தசாமி வைத்தியர்
## சந்தனாதித் தயிலம்

**ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2**

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும், முரசுவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல் ஹோல்

வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30.6.48 (வே)

---

## பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1 26—3—47 to 1—4—48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

சனி டிசர்பர் 20

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 வி சாந்தகுமாரி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருப்பாப்புலியூர் வி ராஜமய்யர் வயலின் 8 30 காலை இசை இசைத்தட்டு 9 முடிவு.

1 திருப்பாப்புலியூர் வி ராஜமய்யர் வயலின் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 சர்வ கலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2 05 சர்வகலாசாலைக்குறிப்பு 2 15 கே ஆனந்தா பாட்டு 2 45 முடிவு

மாலை 5 கே ஆனந்தா பாட்டு 5 40 பெரியபுராண விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 வி சாந்தகுமாரி பாட்டு 7 15 ராணுவத்திலிருந்து திரும்பியவர்களுக்கு வேலைதேடிக்கொடுக்கும் ஸ்தாபனங்கள் 7 30 தமிழில் செய்திகள் 7 45 டி கே பட்டம்மாள் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 ஆங்கிலப்பேச்சு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஜலதரங்கம் வயலின் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு

ஞாயிறு டிசம்பர் 21

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 தில்லையாடி எஸ் பாண்டுரங்க பாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலைஇசை இசைத்தட்டு 8 30 கமலா ராமச்சந்திரன் வீணை 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12 30 உலகநாதன் உயல் நாடகம் 12 45 சரசப்ரியா இசைவிசித்திரம் 12 50 ஊர்த்துவத் தாண்டவம் இசைநிகழ்ச்சி 1 மணிமலர் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பி என் அங்கப்ப பிள்ளை நாகஸ்வரம் 2 தமிழில் செய்திகள் 2 05 பெண்ணுலகம் 2 30 நீங்கள்கேட்டவை இசைத்தட்டு 3 ஒலிபரப்பு முடிவு

மாலை 5 வி என் பாலசுப்பிரமணியம் பாட்டு 5 40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 வி என் பாலசுப்பிரமணியம் பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 திரைப்பட விமர்சனம் 8 வி எஸ் கிருஷ்ணய்யர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 புல்லாங்குழல் கிளாரினெட் 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.

திங்கள் டிசம்பர் 22

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 திருராமேஸ்வரம் ஆர் மீனாட்சி சுந்தரம் கிருஷ்ணமூர்த்தி நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 புதிய பாடல்கள் அ இ ரேடியோ வித்வான்கள் தயாரிப்பு 8 30 எம் ஆர் சிவராமன்நாயர் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எம் ஆர் சிவராமன்நாயர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எம் ஆர் சிவராமன்நாயர் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 திருராமேஸ்வரம் ஆர் மீனாட்சி சுந்தரம் கிருஷ்ணமூர்த்தி நாகஸ்வரம் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 உமையாள்புரம் ஜி கல்யாணமய்யர் பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 காப்பி ஹோட்டல் 8 உமையாள்புரம் ஜி கல்யாணராமய்யர் பாட்டு 8 30 நாட்டிய சங்கீதம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 கடத்தூர் எம் சங்கராமையர் வீணை 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

செவ்வாய் டிசம்பர் 23

காலை 7 15 கீதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 கே தங்கம்மா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலைஇசை இசைத்தட்டு 8 30 குன்னக்குடி வி வெங்கடராமய்யர் புல்லாங்குழல் 9 முடிவு.

1 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கே தங்கம்மா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கே தங்கம்மா பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 திருப்பாம்புரம் என் சிவசுப்பிரமணியபிள்ளை பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 தாலவாத்யக்கச்சேரி 7 30 தமிழில் செய்திகள் 7 45 மன்னார்குடி ராஜகோபால் பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 இசைவிழா 10 30 முடிவு.

## நாவலர் தினம்

### நாளை நிகழும்

நிகழும் சர்வசித்து வருஷம் மார்கழி மாதம 5ந் திகதி (20-12-47) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நாவலர் பாடசாலை மண்டபத்தில் திரு சு, நடேசபிள்ளை B. A. B. L, F. R. E. S. அவர்கள் தலைமையில் மேற்படி வித்தியாசாலைச் சைவ இளைஞர் சங்கத்தின் ஆதரவில் நாவலர்தின விழா நடைபெறும.

பிற்பகல் 4 மணி தொடக்கம் 7 மணி வரையில், யாழ்ப்பாணத்திற் பிரபல்யம் வாய்ந்த சங்கீத விற்பன்னர்களின் சங்கீதக் கச்சேரி நாதஸ்வரக் கச்சேரி, முதலியன நிகழும். 7 மணி தொடக்கமாக, திருவாளர்கள்: ஏ. வி மயில்வாகனம், சி, நாகையா, வி முத்துத்தம்பி, எஸ் கண்ணனடிகள் என்பவர்களால் நாவலர் பெருமான் வாழ்க்கைத்தொண்டு என்பன பற்றிப் பிரசாரணங்கள் நிகழ்த்தப்படும்.

## நேதாஜி வாசகசாலை

வண்ணார்பண்ணை, காங்கேசன் துறை றோட்டில் உள்ள ஷை வாசகசாலை அபிவிருத்திக்குரிய முறைகளைப்பற்றி ஆலோசிப்பதற்காகச் சென்ற 5-12-47 ல் மேற்படி வாசகசாலை மண்டபத்தில் ஓர் கூட்டம் நிகழ்ந்தது. பலர் சொற்பொழிவாற்றினர்.

பண்டிதர்

ம. வே. திருஞானசம்பந்தப் பிள்ளையின்

## அறுபதாம் ஆ. நிறைவு விழா நிதி

நமது பண்டிதரவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழாவை, வருகிற மார்கழி மீ ௧௨ (27-12-47) சனிக்கிழமை திருவருளை முன்னிட்டு நடத்தநிச்சயித்திருப்பதால், அத்தேதிக்கு முந்தியே மேற்படி பண்டிதரவர்களின் மாணக்கர்கள் அபிமானிகளாயுள்ளா ரனைவரும் இந்நிதியின் பொருட்டுத் தம்மால் இயன்றபணம்உதவுக: மேலும் பணம்உதவும்அன்பர்கள் தம்பெயர் விலாசமென்னு மிவைகளைத் தெளிவாக எழுதி, திரு. S. P. கந்தையா அவர்கள் மேற்படி நிதித் தனதிகாரி, இந்துசாதனாலயம், வண்ணார்பண்ணை என்னும் விலாசத்திற்கு அனுப்புக.

இந் நிதிக்குப் பண முதவுவோரின் பெயர், விலாசம், பணத் தொகை முதலியன இந்துசாதனத்தில் வெளிவரும்.

திருவாளர்கள்:

| | ரூ. ச. |
|---|---|
| முன் கணக்குப்படி | 1390 00 |
| வ. சோமசுந்தரம், திருநெல்வேலி | 10 00 |
| த, முத்துசுவாமிப்பிள்ளை (Crown Advocate) வண்ணார்பண்ணை | 25 00 |
| | 1425 00 |

கா. கந்தையா, தலைவர்.

க. சி. சுப்பிரமணியம், காரியதரிசி.

ஷை பண்டிதரின் சஷ்டியப்தபூர்த்திச் சபை, வண்ணார்பண்ணை


திரு. வே. சிவக்கொழுந்து

அவர்களியற்றிய

## பிரதமவகுப்பு நூல்கள்

1 நாலாந்தரப் பூமிசாத்திரம் ( 7-ம் பதிப்பு ) விலை சதம் 80
2 ஐந்தாந்தரப் பூமிசாஸ்திரம் ( 5-ம் பதிப்பு ) விலை ரூபா 1
3 நாலாந்தரக் கணிதம் ( புதிய பதிப்பு ) விலை ரூபா 1 35
4 ஐந்தாந்தரக் கணிதம் ( புதிய பதிப்பு ) விலை ரூபா 1 50
5 இரண்டாம் மூன்றாந்தரக் கணிதங்கள் ( அச்சில் ) விரைவில் வெளிவரும்

☞ புதியபாடத்திட்டத்துக்கு அமைய எழுதப்பெற்ற மேற்படி நூல்கள் ஆங்கில பாடசாலைகளில்கல்விபயிலும் தமிழ்ச்சிறுர்களுக்கும் உகந்தபாடப்புத்தகங்களாகும்.

வட இலங்கா புத்தகசாலை

பெரியதெரு, பருத்தித்துறை



## இலக்கிய வாசகம்

மூன்றும் புத்தகம்

நான்காந்தரத்துப் பிள்ளைகட்கு உபபாடமாகவுள்ளது

(புதுக்கிய இரண்டாம் பதிப்பு)

இதன் வசனபாகம்

சத்தியவிரதம்பூண்ட அரிச்சந்திரமகாராசனுடைய வரலாறு இலகுவான இனிய செந்தமிழ்வசனநடையில் 18பாடங்களாக வகுத்தெழுப்பட்டுளது

செய்யுட் பாகம்

பஞ்சதந்திரத்தில் காக்கை ஒட்டகத்தை வஞ்சித்த கதைச்செய்யுள் நீதிக்கவித் திரட்டு, சதகத் திரட்டு என்னு மிவைகள் அடங்கி யுள்ளன.

பிரதியின் ஈற்றில் அரும்பத விளக்கம், செய்யுட் பாடவுரை என்னுமிவைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

பிரதி ஒன்று விலை சதம் 60 (அணு 10)

இங்குள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெறற்பாலன

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை

யாழ்ப்பாணம்



## திருவருட்பயன்

சைவத்திருவாளர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் (B.A.)

இயற்றிய விரிவுரையோடு கூடியது. தமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸீ. வகுப்புகளுக்குச் சமய பாடமாக விதிக்கப்பட்டது. புதுக்கிய பதிப்பு

விலை சதம் 75 ( அணு 12 )

**திருக்குறள்** முதல் 20 அதிகாரம்

பதவுரை, கருத்துரை, விசேடவுரை ஆங்கில மொழி பெயர்ப்பு, நூலாசிரியர் வரலாறு என்னுமிவற்றுடன்

விலைசதம் 75 (அணு 12)

யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையிலும், பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாகும்

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்


### வியாவில் ஐக்கிய பண்டசாலை

### காரைநகர்

ஷைபண்டசாலையின் 3-வதுவருடாந்தப் பொதுக்கூட்டம் நிகழும் சர்வசித்து வருஷம் கார்த்திகைமாசம் (26-11-47) புதன்கிழமை சாயங்காலம் நான்கு மணியளவில் வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலை மண்டபத்தில் திருவாளர் இ. நாகலிங்கமவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது பண்டசாலைப் பரிசோதகர் திரு. V. தெட்சணாமூர்த்தி அவர்களுஞ் சமுகங் கொடுத்திருந்தார்கள். அங்கத்தவர்களுர் அதிகமானோர் கூட்டத்திற் கலந்து கொண்டனர் தேவாரத்தோடு கூட்டம் ஆரம்பமாயிற்று. சென்ற பொதுக் கூட்ட வரலாறு, தனதிபர் அறிக்கை, இலாபப்பங்கீடு முதலிய விஷயங்கள் காரியதரிசி திரு. அ தேவராசா அவர்களால் படிக்கப்பட்டுச் சபையோரால் அங்கீகாரம் பெற்றன. அப்பால் புதுவருஷ நிர்வாகசபை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

—கடித.

### திருவாதவூரடிகள் புராண படனம்

வண்கிழக்கு அரசடி விநாயகர் கோவில் மண்டபத்தில் இன்று தொடக்கம் (19-12-47) மார்கழித் திருவாதிரை வரையிலுள்ள திருவெம்பாவைக் காலத்தில், திருவாதவூரடிகள் புராணபடனம் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் நடைபெறும் எனத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

ணஞ் செய்துகொள்வே னென்று தானே சொல்லுகிறேன்; நிச்சயித்திருந்தவரன் விதிவசத்தால் அகப்படாதொழிந்தால், வேறொருவனை எங்களுக்காக, உலகத்திற்காக, சந்ததி விருத்திக்காகச் செய்துகொள்வதுதானே அம்மா முறையாகும்; இதற்குத் தங்கை உடன்படத்தானே வேணும்; உலகத்தில் அப்படி நடப்பதில்லையா? மணப்பந்தரிற் போயிருந்த மாப்பிள்ளை தாலி கட்டுவதற்கிடையில், கல்யாண ஒழுங்கு எதுங் காரணத்தினுற் குழம்பிப்போக, அந்த மணமகனுக்கு வேறு பெண்ணையும், பெண்ணுக்கு வேறு மாப்பிள்ளையையும் பின்னர் மணஞ் செய்துவைக்க, அவர்கள் இல்லறத்தை இனிது நடாத்திச் சந்ததிவிருத்தியாக வாழ்ந்த செய்தியும் உலகத்திலே உண்டுதானே, அம்மா" என்ருன் தமயன்: "அப்படியுமுண்டு தான் அண்ணு, திலகவதியாரைப் போன்ற உத்தமிகளுமுண்டுதாம் அண்ணுஎன்றுநான்சொல்ல, திலகவதியாரைப்போலநீஇருந்தால், திருநாவுக்கரசர்போல நான் இருப்பேன் என்று அண்ணு சொல்லுகிருர் அம்மா, ஆண்களுக்கும் பெண்களுக்கும் எல்லா விஷயத்திலும் ஒரேநியாயம் ஒற்றுமையாய் வருமா? ஒரு ஆடவன் தாரமிழந்தால், இன்னொரு தாரத்தைக்கொண்டு இல்லறம் நடத்தலாம்; ஆனுல் ஒரு பெண் கணவனையிழந்தால இன்னுமொருவனுக்கு இல்லாளாய் வாழ்வது சைவர்களாகிய எங்களுக்கு ஏற்குமா? அம்மா, இப்படிச் சில சில கொள்கைகள் ஆண்களுக்கு வேறு, பெண்களுக்குவேறு என்றதற்குச் சொல்லுகிறேனே யல்லாமல், என் அருமையான அண்ணனுக்கு எதிராக நியாயம் பேச எப்போதாயினுந் துணிவேனே" என்று சொல்லி இதமாக முடித்தாள் சிவபாக்கியம்; தன் பிள்ளைகளின் இனிய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த தாய் எது நியாயம், எது நியாயத்திற்கு மாறு என்பதைச் சொல்ல முடியாதவளாய், இருதலைக் கொள்ளியினுள் ளெறும்புபோன்றவளாய் இடர்ப்பட்டாள்.

கடிதங்கள்

தன் பிள்ளைகள் ஒருவகையிட்டொருவர் கவலைப்படுவதையும், அவர்களுக்கிடையேயுள்ள சகோதரபாசத்தையும் தன் மருமகனைப்பற்றி ஏதும் அறிய முடியாமலிருப்பதையும் தன் மகள்கொண்ட வைராக்கியத்தையும் பற்றி மாறிமாறிச்சிந்தித்துக்கொண்டு அன்றிரவு முழுவதும் உறக்கமின்றிச் சிந்தனையோடு கூடியவளாய்க்கிடந்தாள் கண்ணகியம்மை. சிவபாக்கியமும் தான் இருப்பதனுல், தனக்கேனும் தங்கள் தாய் சகோதரம் மாமன் முதலியவர்களுக்கேனும் எவ்வகையானநன்மையுமில்லாதாக,தான் இருந்தும் இறந்தவள் போலானேனேயென்ற சிந்தனையோடு கூடியவளாக உறக்கமின்றிப் படுத்துக்கிடந்தாள். அந்த நீண்ட இராக்காலம் ஒருவாறு கழிந்தது; தாயும் மகளும் தங்களைத்தாங்களே தேற்றிக்கொண்டு தாம்தாம்செய்யவேண்டிய வீட்டுக்கருமங்களைச் செய்தார்கள்; அன்று மத்தியானம் சிவகுருநாதன்விலாசத்தில் ஒரு கடிதமும், சிவபாக்கியத்தின் விலாசத்தில் ஒரு கடிதமும் கிடைத்தன; சிவபாக்கியம் தன் தமயன் விலாசத்தில் வந்த கடிதத்தை வைத்துவிட்டுத தன் விலாசத்தில் வந்தகடிதத்தைப் பிரித்துப் படித்தாள்? அது பாக்கியலட்சுமி சிவபாக்கியத்திற்கும தமயனுக்கும் தாய்க்கும் எழுதிய கடிதமாகும்; அக்கடிதத்தில் சிவபாக்கியத்தின் மைத்துனரைப்பற்றி இன்னமும் அறியமுடியாதிருத்தலையிட்டுத் தாங்கள் கவலைப்படுவதாகத் தொடக்கத்திலே எழுதிச் சிவபாக்கியத்திற்குத் தேறுதல் கூறியும் எழுதியிருந்தாள் பாக்கியலட்சுமி, அவ்வளவோடமையாது ஊரிலிருந்து தன் சொந்தத் தாய் தனக்கு எழுதிய கடிதத்தையும் பாக்கியலட்சுமி தானெழுதிய கடிதத்தோடு சேர்த்து அனுப்பியிருந்தாள்; அக்கடிதத்திலே பாக்கியலட்சுமியின் சொந்தத் தாய் கண்ணகியம்மைக்கும்மக்களிருவருக்கும் நன்றி பாராட்டியெழுதியதோடு சிவபாக்கியத்தின் மைத்துனனைப்பற்றி ஒன்றுந் தெரியவில்லையேயென்பதையிட்டுக் கவலைப்பட்டும் எழுதியிருந்தாள்; சிவகுருநாதன்மத்தியானப் போசனமுண்ணும்படி வீட்டிற்குவந்தபோது அவனுடையவிலாசத்திற்கு வந்த கடிதத்தையும், பாக்கியலட்சுமி தனக்கெழுதியகடிதத்தையும சிவபாக்கியம் தன் தமையனிடம் கொடுத்தாள்; சிவகுருநாதன் தன்னுடைய விலாசத்தில்வந்த கடிதத்தைப் பிரித்துப் பார்த்தபோது அது தங்கள் மாமன் தங்களிருவருக்கும் தாயாருக்கும் எழுதிய கடிதமெனக்கண்டான்: அக்கடிதத்திலும் மாமனுர் தம்முடைய மகனைப்பற்றி அதுவரையில் ஒன்றுமறிய முடியவில்லையே யென்றும். மருமகளுடையநிலைமைதம்மை வருத்துகின்றதென்றும் எழுதியிருக்கக் காணப்பட்டது. கடிதங்களைப்படித்துப் பார்த்துவிட்டுத் தன் சட்டைப் பையுள் அக் கடிதங்களை வைத்துக்கொண்டு தாய்க்குஞ் சகோதரிக்குந் தேறுதல் சொல்லித் தேற்றிவிட்டுப் போசனம் முடித்துக்கொண்டு கவலையோடு கூடியவனாய்த் தன் உத்தியோகத்தானத்திற்கு மீண்டான்; அவன் அன்று பிற்பகல் உத்தியோகத்தானத்திலிருந்து மீண்டு வந்தபோதும் தன் தங்கை சஞ்சலத்துடனிருக்கக்கண்டு அவளுக்குப் பலவாறு ஆறுதல் வார்த்தை சொல்லி ஒருவாறு தேற்றினுன்; தன் மாமனுருக்கு எப்படிப் பதில் எழுதுவது என்று சிவகுருநாதன் அன்றிரவு படுத்துக்கொண்டு யோசித்தபடி அயர்ந்துவிட்டான்; சிவபாக்கியமும் பாக்கியலட்சுமிக்குக் கவலைப்படவேண்டாம், எல்லாம்விதி வழி நடக்குமென ஒருகடிதம் எழுதிவைத்துவிட்டு உறங்கினுள்; அடுத்தநாள் மத்தியானம் போசனஞ்செய்ய வரும்போது தன்உத்தியோகத்தான விலாசத்தில் வந்த ஒரு கடிதத்தைச் சந்தோஷத்துடன் தன் அருமைத் தங்கையின் கையிற் சிவகுருநாதன் கொடுத்தான்,படித்துப்பார்த்ததங்கை ஆநந்த[illegible] [illegible]கேட்ட[illegible] தாள்.

(வரும்)

## பதவி இழந்தார்

இலங்கைப் பாராளுமன்றத்துப் பிரதிநிதியாயுள்ள மிஸ்ரர் பிலிப் குணவர்த்தனமீது 3 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இத்தண்டனையை ஆட்சேபித்து லண்டன் உயர்தர நீதிமன்றத்துக்கு மறுச்செய்ப அநுமதி வேண்டுமென மிஸ்ரர் குணவர்த்தன கேட்டிருந்தார், அப்படி அநுமதியளிக்கமுடியாதென்று லண்டன் உயர்தர நீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது.

மிஸ்ரர் குணவர்த்தன, இனிக்குறித்த சிறைத்தண்டனையை அநுபவிக்கவேவேண்டும். இதன்பயனுக அவர் தமது பாராளுமன்றத்து ஸ்தானத்தையும இழந்துவிடுவார்.

—

இலங்கைச் சுதந்திரவிழாவினை விமரிசையாகக் கொண்டாட இலங்கையரசாங்கம் 8 லட்சம் ரூபா அநுமதித்திருக்கிறது. இவ்விழாவை மன்னர்பிரான் சகோதரரான குளோஸ்டர் கோமகன் ஆரம்பித்து வைப்பார். விழா அநேகமாக அடுத்த ஆண்டு பிப்ரவரி 4-ம் திகதிக்கும் 11-ம திகதிக்குமிடையில் நிகழும,

கடிதங்கள்

## நாவலர் நினைவு நிதி

ஐயா,

உலகினிற்றலை சிறந்த மொழிகளில் ஒன்றுன நம் அருந்தமிழும், சிறந்த சமயங்களில் ஒன்றுன சைவமும் பிறரால் காலந்தோறும் நசுக்கப்பட்டு வந்தமைக் காற்று அவ்வக்காலங்களில் ஒவ்வொரு தலைசிறந்த அறிஞர் நம் தமிழ்நாட்டில் தோன்றித் தமிழையும் சைவத்தையும் வளர்த்து வந்தனர்.

19-ம் நூற்றுண்டிலும் இவ்விதஅழிவுநிலை பிறரால் ஏற்பட இருந்தது. அதனை ஆளுபவர்பிறர்என்று நோக்கி அஞ்சாது தமது புலமை மிக்க நாவன்மையாலும், எழுத்துவன்மையாலும் தமிழையும் சைவத்தையும் காத்த பெருமை வசனநடை கைவந்த வள்ளலான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களையே சாரும்.

நாவலர் செய்த பெருந்தொண்டை நினைவுகூரும் வாயிலாக அவர்கள் தம் வாழ்நாளில் பெருந்தொண்டு செய்வதற்கு ஏற்ற இடமாககொண்ட சிதம்பரத்திலேயுள்ள அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் நாவலர் நினைவு உதவிப்பணம் என்ற பெயரில ஒரு உதவிப் பணத்திட்டமொன்றை வகுக்க எண்ணியுள்ளோம். இதற்காக திரட்ட எண்ணியுள்ள தொகை ரூ 5000 ஆகும். நாவலர் பெருமானின் தொண்டையும் பெருமையையும் நோக்க இத்தொகை மிகச் சிறிய தொன்றேயாம்.

தமிழ்நாட்டின் சிறந்த கலைக்கோயிலாகிய அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் நாவலர் பெருமானை நினைவுகூரும் வாயிலாக ஆண்டுதோறும் நாவலர விழாக் கொண்டாடிவருகின்ரேரும். அவர் திருவுருவப் படம் ஒன்றும் இவண் தமிழ்ப்பகுதியில் திறந்துவைக்கப்பட்டிருக்கின்றது. நாவலர் கண்டகனவுகளுள் ஆங்கோரேழுக்கெழுத்தறிவித்தல் என்பது முக்கியமானது. இக்கனவை இயன்றவரை நிறைவேற்றுவது தமிழ்மக்கள் கடனும். இதற்காகத் திரட்டப்படும்பணத்திலிருந்து வரும் வட்டிப்பணம் கீழ்க்காணும் முறைப்படி அளிக்கப்படும்.

திரட்டப்படும் நிதியை அண்ணுமலைப் பல்கலைக்கழக ஆட்சியாளரிடம் (Syndicate) ஒப்புவித்து ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டிப் பணத்திலிருந்து இப் பல்கலைக் கழகத்தில், தமிழ், இசை, ஆங்கிலம்பயிலும் இலங்கை மாணவர்களுள் ஒருவருக்குத் திறமை செல்வமின்மை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு உதவிப்பணம் அளிக்கப்படும். அதற்குரிய விரிவான விதிகளைப் பின்னர் முடிவுசெய்து தெரிவிப்போம்

ஆதலால் தமிழ் மொழியின்கண்ணும் நாவலர் பெருமானிடத்தும் பேரன்புள்ள பெருமக்கள் தங்களாலியன்ற பணவுதவி செய்து எம்மை ஊக்குமாறு வேண்டுகின்ரேம்,

இங்ஙனம்

மணி அருள்நந்தி,

க. சிவராமலிங்கம்

செயலாளர், நாவலர் நிதிக்குழு

Dr. அ. சிதம்பரநாதன்

செட்டியார். M. A. Ph. D.

தமிழ்ப் பேராசிரியர், தலைவர்

●

## ஆசிரியர் படுங் கஷ்டங்கள்

ஐயா,

வேண்டிய சமயம் உயர்ந்த கட்டடங்கள், மேடைகள் ஆகிய இடங்களுக்கு இலகுவில் ஏற உதவியா யிருப்பது ஏணி. வேண்டின் இதில் சிறு உத்தியோகத்தர், விவசாயிகள். மந்திரிகள் பிரதானிகள் முதலிய யாவரும் ஏறிக் குறிப்பிட்ட இடத்தை அடையலாம். ஆனுல் ஒருவரும் ஏணியின் உதவியை (இறக்கும்வரை) சற்றும் கவனிப்பதில்லை. இதற் கமையத் தோணியும் தன்மீது இவர்ந்தாரை மணி

தரை மாத்திரமல்ல எருமை செம்மறியைக் கூட மறுகரையில் கொண்டு சேர்க்கும்.

இவ்வாருக ஆசிரியர்களும்பிறர்க்குதவி புரிந்து யாவரையும் ஒருசேரச்சற்பித்தும் நற்பணிபூண்டும், தொண்டாற்ற அவர்களை வறுமையில் வாழவிடுத்து, அவர்தம் உதவிகொண்டு மாடமாளிகை மன்றம் இவர்ந்தவர்கள் சற்றும் ஆசிரிய நலன்களைப் பேணுதுவிட்டு விடுகின்ருர்கள். ஆசிரியர் தம வறுமைகாரணமாகத் தம் குறை சாதிக்க முடியா திருக்கின்றனர். கிழ்த்தரமான வேலை நிறுத்தஆயுதம் பூணவும் முடியாத குலத்தினர். இத்தகைய வறிய வேதன முடையார்க்காகச் சாவகச்சேரிப் பிரதிநிதி ஸ்ரீ V. குமாரசுவாமி M. P. அவர்கள் பரிந்து பேசியதையும், இவர்க்கு உதவிபுரியக் கருமம் பார்ப்பதையும், வேறு உத்தியோகத்தருக்கு நிலுவைப்பணம் வழங்கிப் பல மாசமாகவும் ஆசிரியர்கள் கஷ்டமுற இன்னும் நிலுவை ஓர் ஒழுங்கு முறைப்படி வழங்காது, விடப்படும் குறைகளை நன்கு அதிகாரிகளுக்குத் தெருட்டுவதையும், ஆசிரியர் உலகம் நன்றியுடன் நன்கு கவனிக்கிறது.

ஐயா, ஆசிரியர் உலகமும் மற்றவர்களைப் போல்வாழவேண்டிய (உயிருள்ள) பிராணிகளா யிருப்பதால், இவருக்கு உறுதுணையாக நின்று ஆசிரிய உலகை உயர்த்தி அவ்வாயிலாக நாட்டையே நல்வழியுறும்வகை செய்யும்படி ஏனைய பிரதிநிதிகளையும் சேட்கின்றேம்.

இங்ஙனர்,

தங்கள் உண்மையுள்ள,

R. T. சுப்பிரமணியம்.

ஆறுமுகவித்தியாசாலை,

சுழிபுரம், 18.12.47.

## காணி விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 318 ம் இலக்க பராபரிப்புத் தத்துவ வழக்கில் (318 G D. C. Jaffna)

சுன்ணுகம் பராயமறற வல்லிபுரம் இராசரத்தினத்தின் சொந்தமான கீழ் விபரிக்கப்படும் மூன்று ஆதனங்களை வாங்க விரும்புவோர் இது விளம்பரப்படுத்திய திகதியிலிருந்து 21 நாட்களுக்கிடையில் தங்கள் தங்கள் (ஒவ்வொரு காணியின் அதி உயர்ந்த) கேள்வியை மேற்குறித்த கோட்டுச் சக்கிடுத்தாருக்காவது அல்லது எனக்காவது கிடைக்கும்படி விண்ணப்பஞ் செய்யுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

காணிகளின் விபரம்

1 உடுவிற் கோயிற்பற்று சுன்ணுகமிறை "கதிரவலை" குளி 6 18/32 ம் கிழக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றிற் பங்கும் வழி வாய்க்காலும். எல்லை கிழக்கு கையொழுங்கை. வடக்கு கை ஒழுங்கை. மேற்கு ஒழுங்கை. தெற்கு வேலுப்பிள்ளை பெண் தெய்வானைப்பிள்ளை. இதடங்கலும்.

2 மேற்படியிறை 'மாறத்தை' நிலப்பரப்பு 46 ம் கிணறும் மேற்கேயிருக்கும கிணற்றில் பங்கும். எல்லைகிழக்கு தம்பிப்பிள்ளை பெண் செல்லமும் மறுவும் சின்னத்தம்பி சுவாத்தினமும் ஒழுங்கையும் சின்னத்தம்பர் கனகரத்தினமும். மேற்கு சின்னத்தம்பர் கனகரத்தினமும் ரெயில் ரோட்டும். தெற்கு ஆசைப்பிள்ளை நடராசா. இவ் வெல்லைக்குட்பட்டவைகளில் சொரியலாய் 1/32.

3 மேற்படி யிறை "உப்பத்தறவை" தெற்பரப்பு 24 ம் குளி 9 ம் கிணறும். எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கும் தெற்கும் சுப்பிரமணியம் கைப்பெண் உத்தராடம். மேற்கு குமாரசுவாமி அம்பலவாணரும் கனகசபை பொன்னையாவும் இவ் வெல்லைக் குட்பட்டவைகளிற் சொரியலாய் 1/32.

தி. குமாரசுவாமி

பாதுகாப்புக்காரனின் பிறக்ரர்.

சுன்ணுகம், 18 12-47.

Mis 200 16 19

இலங்கைப் பிரதமர் இன்னும் சில தினங்களில் புதுடெல்லிக்குச் சென்று, இந்திய பிரதமர் பண்டிதர் ஜவஹர்லால் நேருவுடன் இலங்கை இந்தியப் பிரச்சினை பற்றிச் சமரசப் பேச்சுக்கள் நிகழ்த்துவார். அதன்பின் அவர் பாகிஸ்தானுக்கும் விஜயம் செய்வார் என்று ஓர் செய்தி கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் யார்?

1 ம்பக்கத் தொடர்ச்சி

தனுக்குமுன் நாம் ஒரு இனமே என்பதை மறக்கக்கூடாது. சைவம் வைணவம் அத்வைதம் துவைதம் முதலிய வேற்றுமைகள் எல்லாம் நமக்குள் இருக்கலாம். புறத்தார் நம்மை எந்தக் கண்ணுல் நோக்குகின்ருர்என்பதை நாம் நன்கு அறியவேண்டும். அவர்களுக்கு நாம் ஹிந்துக்களே என்பதை ஒவ்வொரு கணமும் நாம் அனுபவத்தில் அறிந்தே வருகிறோம். நாம் உருத்திராக்கம் அணிந்தாலும் திருநீறு பூசினலும் திருத்துழாய் மாலை சூடித் திருமண் அணிந்தாலும் தலையிலே குடுமி வைத்திருந்தாலும, மொட்டை யடித்திருந்தாலும் நாம் பத்துமுழ வெள்ளாடை உடுத்தாலும் நான்குமுழக் காவியுடைகட்டினலும் கோவணுண்டியாக நின்ருலும் அவர்களுக்கு நம்மைப்பற்றிய எண்ணம் ஒன்றே. ஒரு கூட்டத்தார் நம்மை அஞ்ஞானிகள் என்கின்ருர்.மறறொரு கூட்டத்தார் நம்மை நரகவாசிகளாக மதிக்கின்ருர், புறத்தார் நம்மை இப்படி மதித்தாலும் நம்மில் ஒரு சிலரையேனும் தம் வழியில் ஒவ்வொருநாளும் இழுத்துச்சேர்க்க நினைக்காமலிருப்பதில்லை.

அயலார்தாம் நம்மை நன்கு மதிப்பதில்லை என்று எண்ணவேண்டாம். நம்மவரில் நம் இனத்தவரில் நம் உறவின் முறையாரில் ஒருசிலர் சில புதுமைச் கிளர்ச்சிகளிற்புகுந்து நம்கொள்கையின் தத்துவங்களை உள்ளபடி ஆராய்ந்து உணர்ந்து கொள்ளாத குறையாலோ வேறு என்னகாரணத்தாலோ நம்மையும நம் கொள்கையையும் அக்கொள்கையைவிளக்கும் நூல்களையும் தெருவுக்குத் தெரு சந்திக்குச்சந்தி வாயாலும்கையாலும் அளவு அறியாமல் இகழ்கின்ருர், தூற்றுகின்ருர். வேறு எந்த மதத்திலாவது உலகத்தில் எந்த நாட்டிலாவது இத்தகைய புண்ணிய கைங்கரியம் நடப்பதாகக் காட்ட முடியுமா? ஒரு முஸ்லீம் | தன் மதத்திலே வழங்கும் எந்தக் கொள்கையிலேயாவது ஒருகுறையிருப்பதாகச் சொல்லத் துணிவானு? ஒரு கிறிஸ்தவன் எங்கேயாவது இயேசுகிறிஸ்துவின் மகத்துவத்தைச் சிறிதளவாவது குறைத்துப் பேசத் துணிவானு? அப்படியே துணிந்தால் அவர்கள் கதை என்னுகும்?

இன்று நம்நாட்டில் நமக்கு நம்மதத்துக்குப் புறப்பகை ஒருபுறம் அகப்பகை ஒருபுறம்வாட்டுகின்றன."புறப்பகை கோடியின் மிக்குறினும் அஞ்சார், அகப்பகை ஒன்றஞ்சிக்காப்ப" என்றபுலவர் பொய் நினைத்திருப்பாரா? புறப்பகையை நாம் வெல்லவோ அடக்கவோ நினைப்பது ஒருபுறம் இருக்க, அகப்பகைக்கு என்ன செய்வது என்று சிறிது சிந்திக்க வேண்டாமா? முன்னுளிலே அரசரே மதங்களைத் தாங்கும் பொறுப்பைப் பூண்டிருந்தனர். அதனுல் நம் நாட்டில் தோன்றிய மத வேற்றுமைகள் எல்லாம் கலை வளர்ச்சிக்கு உறுதுணைகளாக முடிந்தன. இந்நாளில நம் அரசு ஒரு மதத்தை அரசாங்க மதம் என்றுஏற்றுக்கொள்ளும்நிலையிலில்லை இந்து மதத்தையா இஸ்லாமிய மதத்தையா கிறிஸ்தவ மதத்தையா எந்த மதத்தை அரசாங்க மதமாக்குவது என்ற கேள்வி எழும். ஆங்கில அரசு நடக்கும்வரையில் அவர்கள் மதத்துக்கு ஒரு சலுகை இருந்தது, இனி அந்தச் சலுகை நிலைக்காது. இஸ்லாமியர் பாகிஸதான் என்ற ஒரு பகுதியைப் பிரித்துக்கொண்டு போனுலும் நம்மிடையே மிகுதியாய் வாழ்கின்றனர். கிறிஸ்தவரும் சீக்கியரும்நம்மை விட்டுப் பிரிந்துபோக விரும்பவில்லை. ஆகவே நம்சுதந்திர இந்திய நாட்டுக்கு இன்ன மதந்தான் உரியது என்று கூறும் உரிமை நமக்கு இல்லை. இந்தியா இந்தியர் என்ற பொதுநலப் பெயர்க்கு உரிமைபூண்ட எல்லாமதத்து மக்களுக்கும் உரியது என்று நாம் மனமாரக் கருதுகிறோம். சொல்கிறோம். இவ்வுணர்ச்சியுள்ளளவும் நம் நாட்டு மதம் என்ற ஒன்று இருப்பதற்கு நியாயம் இல்லை. இதனுல் நம் மதத்தைக் காக்கும் பொறுப்பு அரசுக்கு இல்லை என்று நாம் உணர வேண்டும். (வரும்)

# இலங்கையில் தமிழர் நிலை

முதலாம் பக்கத் தொடர்ச்சி

மாதிரியாக நடவாமல் மனித சமூக வளர்ச்சிக்காகத் தொண்டினைச் செய்தல் வேண்டும் என்பதற்கேயாகும்.

இலங்கைக்குத் தலை வடமாகாணம் எனவும் வடமாகாணத்தவர்களுக்கு விசேட மூளை உண்டெனவும் நீண்டகாலமாக யாவரும் எண்ணியிருந்தனர் ஆனல் கடந்த பாராளுமன்றத்தெரிவின்போது இவ்வூரவர் நடந்துகொண்ட முறையை யிட்டுப் நாம் அவ்வளவு புத்திசாலிகள் அல்லவென்றே துணிந்து கூறவேண்டியிருக்கின்றது. தமது சுயநலத்திற்காகச் சாதி யபிமானத்தை உண்டாக்கி—தலைவர் பதவியை அடையும் நோக்கத்துடன் சிங்களர்—தமிழர்வேற்றுமையைப்புகுத்தித்சில ரதெரிவில் வெற்றி யடைந்துள்ளனர். இம்மாதிரியானவகுப்புவேற்றுமைகள் அறவே கூடாதென மகாத்மாகாந்தி பண்டிதநேரு முதலியோர்கள் அன்றும் இன்றும் இடித்திடித்துக் கூறி வருகின்ருர்கள். பொது ஜனங்கள் ஆவமாக அனுப்பப்பட்டுள்ளனர். ஆனமையால் இவ் வாசிகசாலையினர் இந்திய—இலங்கைப் பத்திரிகைகளை ஐயந்திரிபற வாசித்து இவ்விதமான சுயநலத்திற்கோ அனுப்பலுக்கோ எடுபடா திருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்களது கட்சியைச் சார்ந்தவர்களே தமிழர்க ளெனவும், அல்லாதோர் தமிழர்க ளல்லர் எனவும ஓர் பிரசாரம் நடைபெறுகின்றது. அக்கட்சியைச் சேராத இரு தமிழர் மந்திரிசபையி லிருப்பதால் அவர்கள் தமிழர்கள் அல்ல ரெனவும், தமிழ்த் துரோகிகள் எனவும் கூறுகிருர்கள், அம்மந்திரிமார்களை விடுத்து இககட்சியினருக்கு மந்திரிப் பதவிகள் கொடுத்தால ஆனந்தத்துடன் ஏற்று உவகை உறுவர், என்னே சுயநலத்தின் போக்கு!

தமிழர்கள் கடந்த காலத்தில் மலாயாநாட்டி லிருந்து பெரும்பொருள ஈட்டி வந்தனர் அக்காலம் மலையேறிவிட்டது. இப்பொழுதோ இலங்கையிலேயே உழைத்தல வேண்டி யிருக்கின்றது இது காலை ஒருசிலர் தங்களது கோரிக்கைகள் ஈடேற வேண்டும், அன்றேல் "தமிழ்ஸ்தான்" என்ற பிரிவினை உண்டாக வேண்டும் எனக் கூறுகின்றனர். இதன் பெறுபேற்றை அநுபவிப்பதன் முன்னர் இந்தியாவில் காயிதே அஸாம ஜின்னு அவாகள் பிரதமர் உத்தியோகம வேண்டும் அனறேல் பாகிஸ்தான் வேண்டும். அதன் தலைவராக வரவேண்டும்என்ற சுயநலவேட்கையை அடிப்படையாக வைத்துப் பாக்கிஸ்தானைப் பெற்று அதன் பயனுக நாட்டில் நடைபெற்றுவரும் அராஜகத்தைப் பற்றிக் கேள்விப்பட் டிருக்கிறீ கள். அதே போன்று இங்கும் பிரிவினையை உண்டாககினுல் தமிழ்ச் சகோதரர்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள். இந்திய முஸ்லீமகள் போன்று கஷ்டமடைந்ததின் மேல் தாம் செய்ததுபிழை என உணராமல் நாம் முற்கூட்டியே பிழையை விடாமல் நடத்தல் வேண்டும்" நன்றியுரை கூறியதன்மேல் திறப்புவிழா இனிது நிறைவேறியது.


# இலங்கைவங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

**இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்**

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸற் கம்பனி.

**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிலேஸ வங்கி,

**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி: திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை

**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242,ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்,

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**

இலங்கையில் (திருக்கோணமலையை குருணுக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக் கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**

ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**

இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**

அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**

இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**

ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்,

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

( Std 29 1-8—30-7- 8;



மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

# கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச் செலவு எல்லாம் உட்பட, நாகபட்டனமிருந்து பினங் செல்ல டெக் ரிக்கற் ரூபா 130-க்கு எங்கள்மூலமாக பெற்றுக்கொள்ளலாம்

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

பல நூற்றுக் கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ் செய்து திருப்தியடைந்துகொடுத்த நற்சாட்சிகள் அநேகமுண்டு.

**வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறேம்**

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

**ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,**

252, காங்கேசன்துறை ரோட், :: சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்
தந்தி (Srivel) :: :: பிராஞ்சு: நாகபட்டணம்.

3, 2—9—47&28-2-48


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Friday December 19. 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org